1979 ஏப்ரல் 26]

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, மதுரை நகரில் குடிதண்ணீருக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு? அதன் வேலை எப்போது தொடங்கப்படும்? அந்த வேலை எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, நாம் எல்லோரும் சேர்ந்து தேர்தல் காலத்தில் குடி தண்ணீர் அதிகமாகத் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சொர்ணம் உட்பட, திரு அம்பிகாபதி உட்பட. எனவே ஆய்வு விவரமாக செய்திருக்கிறோம். ஆய்வு என்பது எவ்வளவு மதிப்பீடு எப்படி செய்வது என்பதாகும். மிக விரைவிலே செய்வதாக இருக்கிறோம் அதாவது ''ப்ரேக்னெக் ஸ்பீடிலே'' போகிறோம்.

மன்னார்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள்.

* வினா எண். 833—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மன்னார்குடி நகரில் அரசு ஊழிர்களுக்கு வீடு கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, மன்னார்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கான ஒரு செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று பதில் சொல்கிறார்கள். அது என்ன காரணம் என்பதை அறிவிக்க இயலுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி மன்னார்குடி நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா என்பது. பரிசீலனையில் உள்ளதா என்று கேட்டிருந்தால் சரியான விடை கிடைத்திருக்கும். அரசின் பரிசீலனையில் இல்லை. தற்போது அரசிடம் இதுபற்றிய செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 132 வாடகை வீடுகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு வீட்டு வசதி வாரியத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அங்கே

ஏற்கெனவே சிலபேர் குடியிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அவர்கள் அங்கே விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை வீட்டு வசதி வாரியம் பெற்று அங்கே வீடு கட்டுவதற்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டிருக்கிறேன். அவர் தருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. ஆகவே செயற்குறிப்பு இருக்கின்றது. 132 வாடகை வீடுகள் கட்டுவதற்கு வீட்டுவசதி வாரியத்திடம் செயற் குறிப்பு இருக்கின்றது. அவர்கள் அது குறித்து அரசுக்கு அனுப்பு வார்கள்.

தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்கு ரோந்துக் காவல் படை.

*வினா எண். 834—திரு. ரா. மார்க்கபந்து, திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புக்கென தனி போலீஸ் ரோந்துப் படை அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அது எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுகிறது?

(இ) மற்ற மாவட்டங்களுக்கு அதை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா?

(ஈ) இதற்கு மத்திய—மாநில அரசுகளின் பங்கு என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) தீண்டாமை ஒழிப்புக்கென தனி போலீஸ் ரோந்து படை அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) அது தற்போது கோயம்புத்தூர், மதுரை, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுகிறது.

(இ) இந்த ரோந்து படையினை பிற மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தும் உத்தேசம் உண்டு.

(ஈ) ஏற்கெனவே இயங்கி வரும் ஆறு ரோந்து காவல் படைகளுக்கு ஆகும் செலவை மாநில அரசே ஏற்கிறது.

புதிதாக மேலும் செங்கல்பட்டு, இராமநாதபுரம், கன்னியாகுமரி, வட ஆற்காடு, நீலகிரி, சேலம், தர்மபுரி ஆகிய 7 மாவட்டங்களில் அமைக்கப்படவிருக்கும் ரோந்து காவல் படைகளுக்கு ஆகும் செலவினை மத்திய அரசே முழுவதுமாக ஏற்றுக் கொண்டு இதனை ஒரு மத்திய அரசின் திட்டமாக (Centrally sponsored scheme) அமுல்படுத்த மத்திய அரசு 21-8-1978 அன்று சம்மதித்து இத்திட்டத்திற்காக 1978-1979-ம் ஆண்டில் நான்கு இலட்சம் ரூபாய் கொடுக்க ஒப்புதலளித்துள்ளது.''